

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி பெருந்தெரு பகுதியில் பள்ளி மாணவர் தாக்கப்பட்ட சம்பவத்தில் அதிர்ச்சியில் மாணவரின் தாத்தா கிருஷ்ணன் உயிரிழந்தார். அன்னாரது வீட்டிற்கு நேரில் சென்று முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து ரூ. 3 இலட்சத்திற்கான காசோலையினை அன்னாரது குடும்பத்தினரிடம் தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிலம்பரசன், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி.ஆர்.மனோகரன், முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன் ஆகியோர் முன்னிலையில் வழங்கி ஆறுதல் கூறினார்கள்.



தென்காசி மாவட்டம் மாவட்ட தலைமை மருத்துவமனையில் நேற்று முன்தினம் (13.08.2023) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கண் அறுவை அரங்கம் மற்றும் அறுவை சிகிச்சைக்கு பின் கவனிப்பு பிரிவின் உள்வசதிகளை திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சியர் துரை. இரவிச்சந்திரன் , தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ்.எம்.குமார், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனி நாடார், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா, அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

### நெல்லை மாவட்டம் ரெட்டியார்பட்டியில்

# ரூ.50 லட்சம் மதிப்பில் பொது சுகாதார அலகு!

## சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு - அமைச்சர் மா.சுப்பிரமணியன் அடிக்கல் நாட்டினார்!

நெல்லை, ஆக.15 -

நெல்லை மாவட்டம் ரெட்டியார்பட்டியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்த்துறை சார்பில் ரூபாய் 50 லட்சம் மதிப்பில் பொது சுகாதார அலகு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் பங்கேற்று நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன் நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதிரவியம், சட்டமன்ற உறுப்பினர் அப்துல்வகாப் (பாளை) நயினார் நாகேந்திரன் (நெல்லை) ரூபி மனோகரன்(நாங்குநேரி) மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மாநகராட்சி மேயர் சரவணன், மாநகராட்சி ஆணையாளர் சிவ கிருஷ்ண மூர்த்தி, துணை மேயர் கே.ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலையில் அடிக்கல் நாட்டினார்.

அதனைத் தொடர்ந்து பெருமாள் புரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் அத்தாள நல்லூரில் ரூ.30 லட்சம் மதிப்பில் துணை சுகாதார நிலைய கட்டிடத்தினையும்,எட்டாங்குளத்தில் ரூபாய் 30 லட்சம் மதிப்பில் துணை சுகாதார நிலைய கட்டிடத்தினையும் பெருமாள்புரத்தில் 22 லட்சம் மதிப்பில் பொது சுகாதார ஆய்வக கட்டிடத்தினை யும் மற்றும் பாளையங்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூபாய் 100 லட்சம் மதிப்பில் துணை செவிலியர் பயிற்சி பள்ளி மற்றும் முதல் தர பயிற்சி கூடம் மற்றும் ஆய்வகக் கட்டிடத்தினையும் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் திறந்து வைத்தனர்.அதனைத் தொடர்ந்து பயனாளிகளுக்கு மக்களை தேடி மருத்துவம் பெட்டகங்களை பேரவை தலைவர் மு.அப்பாவு,அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆகியோர் வழங்கினர்.

பின்னர் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவத் துறைக்கு பல்வேறு சிறப்பான திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள். மக்களை தேடி மருத்துவம்,இன்னும் காப்போம் 48 மணி நேரம் போன்ற பல்வேறு திட்டங்கள் ஏழை,எளியவர்களுக்கு மிகவும் பயனுள்ள திட்டமாக உள்ளது. கொரோனா காலகட்டத்தில் மருத்துவர்கள்,செவிலியர்கள் பணிகள் பாராட்டுக்குரியதாகும். மக்களை தேடி மருத்துவம் திட்டமானது ஏழை எளியவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்து வருகிறது.

**47 லட்சம் பேர் பயனடைந்தனர்!**

இத்திட்டத்தினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தீவிரமாக கண்காணித்து வருகிறார்கள். இத்திட்டம் மூலம் தமிழ்நாட்டின் 47 லட்சம் பேர் பயன்பெற்று வருகிறார்கள். ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு தனியார் மருத்துவமனை சிகிச்சை போன்று அரசு மருத்துவமனையில் சிகிச்சை கிடைத்து வருகிறது. தமிழ்நாட்டில் மருத்துவத்துறை மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு பேசினார்.

அதன் பின்னர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி நெல்லை மாவட்டத்திற்கு ரூபாய் 1.82 கோடி மதிப்பீட்டில் சுகாதார நிலைய கட்டிடம் ஆய்வகக் கட்டிடம் மற்றும் துணை செவிலியர் பயிற்சி பள்ளி மற்றும் முதல்தள பயிற்சி கூடம் ஆகியவற்றை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு செவிலியர் பயிற்சி பள்ளி மற்றும் செவிலியர் பயிற்சி கல்லூரி வளர்ச்சி அடைந்துள்ளது. அதன் மூலம் வேலை வாய்ப்புகளும் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் தற்போது செவிலியர் கல்லூரி 6 உள்ளது. முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் கூடுதலாக செவிலியர் பயிற்சி கல்லூரிகளை அரசே எடுத்து நடத்த வேண்டும் என அறிவுறுத்தினார்கள்.அதன்படி டெல்லிக்குச் செல்லும் போது ஒன்றிய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களிடம் நேரில் தமிழ்நாட்டில் 30 செவிலியர் கல்லூரிகள் வேண்டும்.என முதலமைச்சர் அவர்கள் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. தற்போது 11 செவிலியர் பயிற்சி பள்ளிக்கு அனுமதி கிடைத்துள்ளது. புதிதாக அனுமதி கிடைக்கப்பெற்ற 11 செவிலியர் பயிற்சி பள்ளிகள் அனைத்தும் புதிதாக திறக்கப்பட்ட 11 மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் திறக்கப்பட உள்ளது.

கடந்த ஆண்டு பிரதமர் அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு செவிலியர் கல்லூரி வர வேண்டும் என சொன்னார்கள்.இந்த கருத்தை 10 ஆண்டுகளுக்கு முன்பே முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள மாவட்டத்திற்கு ஒரு செவிலியர் கல்லூரி வரவேண்டும் என குரல் கொடுத்தவர். மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டும் என்றும் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் இன்று தமிழ்நாட்டில் 36 அரசு மருத்துவ கல்லூரிகள் உள்ளன. மேலும் மருத்துவக் கல்லூரிகள் இல்லாத மாவட்டம் என்று சொன்னால் 6 மாவட்டங்கள் உள்ளது. (அதாவது தென்காசி,திருப்பத்தூர், ராணிப்பேட்டை,காஞ்சிபுரம், பெரம்பலூர், மயிலாடுதுறை)எனவே இந்த மாவட்டத்தில் அரசு மருத்துவமனை அமைக்க வேண்டும் என கோரிக்கை முதலமைச்சர்கள் சார்பில் தொடர்ந்து வைக்கப்பட்டு வருகிறது. டெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உடல் உறுப்பு தானம் வழங்குவதிலும் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்வதிலும் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முதலிடத்தில் உள்ளது.இதற்கான சிறந்த மாநிலத்துக்கான பரிசினையும் சான்றிதழும் தமிழ்நாடு பெற்றுள்ளது.

நெல்லை மாவட்டத்திற்கு மக்கள் நல்வாழ்வுத் துறை மூலம் ரூபாய் 177 கோடி ரூபாய் மதிப்பில் 10 மருத்துவக் கட்டிங்களுக்கான கட்டுமானப் பணிகள் நெல்லை மாவட்டத்தில் நடந்து வருகிறது. நெல்லை அரசு மருத்துவக் கல்லூரிக்கு இணையாக அம்பாசமுத்திரம் தலைமை மருத்துவமனை அமைவதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.தொடர்ந்து எந்த மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி இல்லையோ அந்த மாவட்டத்திற்கு முதற்கட்டமாக கொண்டு வருவது முயற்சி,அதனை தொடர்ந்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு செவிலியர் மருத்துவக் கல்லூரியில் கொண்டு வருவதற்கான நடவடிக்கையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

கொரோனா காலத்திற்கு பின்பு மாரடைப்பு இளம் வயதிற்கு அதிகம் வருகிறது.இந்த வகையான பாதிப்புகள் கிராமப்புற மக்களுக்கு வரும் நிலையில் உடனடியாக சிகிச்சை பெறுவதில் சிக்கல்கள் நிலவி வந்தது.இதனை தடுக்கும் வகையில் முதலமைச்சர் அவர்களால் இதயம் காப்போம் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.இந்த திட்டத்தின் மூலம் 14 மாத்திரை அடங்கிய மருந்துப் பெட்டகம் தமிழகத்தில் உள்ள 10990 ஆரம்ப நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களில் வைக்கப்பட்டுள்ளது. அதேபோல் நாய்க்கடி மற்றும் பாம்பு கடிக்கான மருந்துகளும் அனைத்து மருத்துவமனையிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.தமிழ்நாட்டில் மருத்துவத்துறை மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.தமிழகத்தின் மிகவும் குறைந்த அளவில் இருக்கும் பேறுகால இறப்பு விகிதம் போல் மேகாலயா மாநிலத்திலும் குறைக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் அம்மாநில அரசு தமிழக அரசுக்கு வைத்து கோரிக்கையை ஏற்று மேகாலயா மாநிலத்தைச் சேர்ந்த 29 மருத்துவர்களுக்கு இறப்பை தடுக்கும் வகையிலான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

**இதுவே சிறந்த உதாரணம்!**

தமிழ்நாட்டின் மருத்துவ சேவையை அறிந்து மேகாலயாவில் இருந்து மருத்துவர்கள் தமிழ்நாட்டில் உள்ள மருத்துவர்களிடம் பயிற்சி பெறுவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு மேகாலயா மருத்துவர்கள் தமிழ்நாட்டுக்கு வருகை புரிந்து பயிற்சி பெற்றனர். ஒரு மாநிலத்தைச் சேர்ந்த மருத்துவர்களுக்கு மற்றொரு மாநிலத்தை வைத்து பயிற்சி அளித்தது, இந்தியாவிலேயே இது தான் முதல் முறை என்பதை குறிப்பிட்டு மேகாலயா முதல்வரும் தமிழ்நாடு அரசை பாராட்டியுள்ளார்.இந்தியாவிலேயே மருத்துவத்துறையில் தமிழ்நாடு சிறந்து செயல்படுவதற்கு இதுவே ஒரு சிறந்த நிகழ்வாகும்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஒன்றிய குழு தலைவர்கள் தங்கப்பாண்டியன (பாளையங்கோட்டை)பூங்கோதை சசிகுமார்(பாப்பாக்குடி) ஸ்ரீலேகா அன்பழகன் (மானூர்) சுகாதாரம் பணி துணை இயக்குனர் ராஜேந்திரன்,

மாநகர நல அலுவலர் சரோஜா, மேலப்பாளையம் மண்டல தலைவர் கதீஜா இக்லாம் பாசிலா, மாமன்ற உறுப்பினர்கள் பொன் மாணிக்கம், சகாய ஜூலியட் மேரி,சபி அமீர் பாத், சங்கர் மற்றும் அரசு அலு வலர்கள் மருத்துவர்கள்,செவிலியர்கள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.

அதன் பின்னர் என்.ஜி.ஓ. காலனி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் இருந்து செல்லும் சாலையினை பார்வையிட்டு ஆய்வு செய்து "நடப்போம் நலம் பெறுவோம்"திட்டத்தில் பொது மக்கள் நடந்து உடல் ஆரோக்கியத்தை பேணி தொற்று நோயிருந்து(சர்க்கரை நோய், உடல் ரத்த அழுத்தம்)தங்களை பாதுகாத்து கொள்ள நடைபயிற்சி மேற்கொள்வதற்கான சாலையினை பார்வையிட்டு இச்சாலையில் ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் வழிகாட்டி பலகை அமைப்பதற்கும், அச்சாலை ஓரங்களில் மரக்கன்றுகள் நடுவதற்கும், நடைபயணம் செய்யும்போது சற்று ஓய்வு எடுப்பதற்கான இருக்கைகள் மற்றும் குடிநீர் வசதிகள்,மருத்துவ வசதிகள்,வழித்தடத்தில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுரைகளை வழங்கினார்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் சாதனைகளின் முழக்கங்களோடு 10,000 க்கும் மேற்பட்ட மகளிர் பங்கேற்ற மாபெரும் எழுச்சிப் பேரணி கடலூரில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைக்கிணங்க, கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் ஏற்பாட்டில், லீமா ஐயப்பன் தலைமையில் மாமன்ற உறுப்பினர்கள் கீதா குணசேகரன், சுமதி ரங்கநாதன், மகேஸ்வரி விஜயன், ராதிகா பிரேம்குமார், கீர்த்தனா ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் டாக்டர் பிரவீன் ஐய்யப்பன் வரவேற்புரையில் நடைபெற்றது.

### முதல்வரின் முயற்சியால்

# தனியார் துறைகளில் 1 லட்சத்து 50 ஆயிரம் நபர்களுக்கு வேலை!

## அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருப்பத்தூர், ஆக. 15 -

தமிழ்நாடு முதல்வரின் முயற்சியால் தனியார் துறைகளில் 1 லட்சத்து 50 ஆயிரம் நபர்களுக்கு வேலை கிடைத்துள்ளது என்று பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் அமைச்சர் எ.வ.வேலு புள்ளி விவரங்களுடன் பேசினார்.

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஆதியூர் பொதிகை பொறியியல் கல்லூரியில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம் மற்றும் தமிழ்நாடு ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார்துறை வேலை வாய்ப்பு முகாமில் 263 நபர்களுக்கு பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இம்முகாமிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கரபாண்டியன். தலைமை வகித்தார். தொடர்ந்து இம்முகாமிற்கு திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்டச் செயலாளர் - ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜி, திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு பணிக்கான ஆணைகளை வழங்கி பேசியதாவது:-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாநிலம் முழுவதும் பல்வேறு இடங்களில் பெரிய அளவில் வேலை வாய்ப்பு முகாம் நடத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, பல்வேறு மாவட்டங்களில் இந்த நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் மாநிலம் முழுவதும் எடுத்துக் கொண்டால் 100 க்கும் பெரிய அளவிலான நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களில் 16,477 நிறுவனங்கள் பங்கு பெற்றது, அதில் 6,74,962 நபர்கள் பங்கேற்று, 1,18,491 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது.

அதிலும் குறிப்பாக 912 மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது. மேலும் 1052 சிறிய அளவில் முகாங்கள் நடத்தப்பட்டு, 12,258 நிறுவனங்கள் பங்கேற்று, 1,43,992 நபர்கள் நேரடியாக கலந்து கொண்டு, அதில் 36,060 நபர்கள் வேலைவாய்ப்பு பெற்று இருக்கிறார்கள். அதில் குறிப்பாக 1502 மாற்றுத்திறனாளிகளுக்கு பணி கிடைத்திருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்று வேலைவாய்ப்பு முகாம்கள் மூலமாக 1,50,000 நபர்களுக்கு தனியார் துறை நிறுவனங்களில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

**2670 பேருக்கு வேலை வழங்கப்பட்டிருக்கிறது!**

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு 100 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, 09.08.2023 அன்று வரை ஒன்பது வேலைவாய்ப்பு முகங்கள் நடைபெற்றதில் 4,551 பணியிடங்களுக்கு 20,698 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதில் 37 மாற்றுத்திறனாளிகள் என்று சொன்னால் அது மிகை ஆகாது. அந்த வகையில் நமது திருப்பத்தூர் மாவட்டத்தில் சென்ற முறை இதே வளாகத்தில் நடைபெற்றதன் அடிப்படையில், மூன்று பெரிய முகாம் மூலமாக 327 நிறுவனங்கள் பங்கேற்றன,12,425 நபர்கள் பங்கேற்று, 2670 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

அதில் குறிப்பாக 27 மாற்றுத்திறனாளி நபர்களுக்கு பணி வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் 46 சிறிய அளவிலான முகாம் மூலமாக நமது மாவட்டத்தில் 304 நிறுவனங்கள் பங்கேற்று, அதில் 6432 நபர்கள் கலந்து கொண்டு, 1751 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் தான் இன்றைய தினம் வேலைவாய்ப்பு முகாம் மூலம் பல்வேறு தொழில் நிறுவனங்களின் மூலமாக வேலைவாய்ப்பு அளிப்பதற்காக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதிலே பல தொழிற்சாலைகளுக்கு, தொழில் வல்லுநர்கள் நடத்துகின்ற தொழில் நிறுவனங்களுக்கு வேலைவாய்ப்பு பெறுகின்ற பணியிலே தமிழ்நாடு அரசு ஈடுபட்டிருக்கின்றது.

முதலமைச்சர் அவர்கள் பட்டதாரிகளுக்கு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கி தர வேண்டும் என்ற அடிப்படையில் தான் தனியார் நிறுவனங்களை ஈடுபடுத்த வேண்டும் என்ற அடிப்படையில் தான் இத்திட்டத்தை அரசு பொறுப்பேற்றவுடன் ஆரம்பித்தார்கள்.

அதன் அடிப்படையில் தான் பல்வேறு இடங்களில் தனியார் துறைகளின் மூலமாக படித்த பட்டதாரிகளுக்கு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப்பெறுகிறது. படித்து முடித்தவுடன் அரசு வேலைக்கு தான் செல்ல வேண்டும் என்று சொன்னால் அனைவருக்கும் வேலைவாய்ப்பு அளிக்க முடியாது. அரசு வேலை என்று சொன்னால் அரசு போடுகின்ற திட்டங்கள் அனைத்தும் மக்களிடத்தில் கொண்டு சென்று நடைமுறைப்படுத்துகின்ற பணியில் தான் அரசு வேலைகள் இருக்கும்.

**அனைவருக்கும் வேலை வாய்ப்பு!**

அரசின் மூலமாக ஒரு ஆண்டிற்கு போடப்படுகின்ற நிதியின் மூலமாக அனைத்து துறைகளும் இயங்குகின்றது. அரசாங்கம் மூலமாக அத்தனை பேருக்கும் வேலை வாய்ப்பு தர முடியாது என்று அரசாங்கம் கருதிய காரணத்தினால் தான் முதலமைச்சர் அவர்கள் தனியார் துறைகளை இணைத்துக் கொண்டு அனைவருக்கும் வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்று முடிவு செய்தார்கள்.

இந்த வகையில் தான் தனியார் துறைகளின் மூலமாக ஏறத்தாழ 1 லட்சத்து 50 ஆயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது. எனவே இந்த வேலைவாய்ப்பை பெறுகிறவர்கள் தகுதி அடிப்படையில் பணியாற்றினாலும் கூட, அரசு வேலைக்கு அல்லது மேற்படிப்பிற்கு நீங்கள் முயற்சி செய்யலாம். இன்று வேலைவாய்ப்பு பெறுகின்ற நபர்கள் பணிகளை மேற்கொள்கிறவர்கள்எங்கு செல்கிறார்களோ அங்கு திறம்பட திறமையை வெளிப்படுத்துகிற பொழுது உங்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்படும். எனவே இன்றைய தினம் வேலைவாய்ப்பு பெறுகின்ற அனைவருக்கும் என்னுடைய நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு தெரிவித்தார்.


பின்னர் வேலை வாய்ப்பு முகாமில் 1680 வேலைநாடுனர்கள் கலந்து கொண்டனர். இம் முகாமில் 103 நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களுக்குத் தேவையான இளைஞர்களை தேர்வு செய்தனர். வேலைவாய்ப்புக்கு தேர்வு பெற்றவர்களில் 183 ஆண்கள் மற்றும் 2 மாற்றுத்திறனாளிகள், 78 பெண்கள் என ஆக மொத்தம் 263 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணையை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலுவால் வழங்கப்பட்டது.

இம்முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இ.வளர்மதி, மாவட்ட ஊராட்சி முகமை திட்ட இயக்குனர் செல்வராசு, மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), சேலம் திருமதி.ஆ.லதா, மாவட்ட ஊராட்சி தலைவர் என்.கே.ஆர்.சூரிய குமார், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திருமதி. த.ரேவதி, அரசு துறை அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கம்மராசபுரம் கே.எம்.இராஜகோபால்

### ஆகஸ்ட் 15 (1980)



தனது 16வது வயதிலேயே திராவிடர் கழகத்தில் இணைந்து, தொடர்ந்து அண்ணாவின் தலைமையை ஏற்று கழகத்தில் தீவிரமாக பணியாற்றி தமிழகமெங்கும் சுற்றி மூடநம்பிக்கை எதிர்ப்பு பிரச்சாரம் செய்தவர்.

அண்ணாவின் 'நீதிதேவன் மயக்கம்' நாடகத்தில் இராவணன் வேடமேற்று நடித்தவர்.

உழவர் குத்தகை உரிமை – இந்தி எதிர்ப்பு – சட்ட எரிப்பு – விலைவாசி உயர்வு எதிர்ப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் களம் புகுந்து சிறை சென்றவர்.

1965ல் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் – 1976ல் மிசா சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.

உத்திரமேரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இரண்டு முறையும் – காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும் – கம்மராசபுரம் ஊராட்சி மன்றத் தலைவராக மறையும் வரை தொடர்ந்து பொறுப்பில் இருந்தவர்.

காஞ்சிபுரம் வட்டக் கிளைச் செயலாளர் – செங்கல்பட்டு மாவட்ட செயற்குழு உறுப்பினர் – தலைமைச்செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**